# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W. 9(L.W.11)

| | |
|---|---|
| Name | Thiru.Sivachandran |
| Father/Husband Name | R.Ramasamy |
| Calling/Occupation | S.I.of Police |
| Age | 35 |
| Address | Virinchipuram P.S. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.07.2026.

( A1 produced through Video Conference and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2024 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை விருதம்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்தேன். கடந்த 29.02.2024 ஆம் தேதி இரவு 19.00 மணிக்கு விருதம்பட்டு காவல் நிலையத்தில் நான் பணியிலிருந்தபோது தசரதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான மனுவை பெற்று நிலைய குற்ற எண். 78/2024 U/s.294(b), 353, 506(i) of IPC & Section 3 of PPDL Act படி

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 9** ஆகும். பிறகு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அன்றே சுமார் 20.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ்குமார் மற்றும் பாஸ்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் என்னிடம் காண்பிக்கப்படுவது. வரைபடம் அ.**த.சா.ஆ. 10** ஆகும்.

மேலும் 20.30 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்த சேதம் அடைந்த பேருந்தின் முன் பக்க உடைந்த கண்ணாடி துண்டுகள் –4 மற்றும் கையில் பிடித்து அடிக்க கூடிய அளவில் அரை செங்கல் –1 ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன்.

பிறகு சாட்சிகள் தசரதன், நடேசன், இளங்கோ, ராஜேஷ், பாஸ்கர், சதீஷ்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 01.03.2024 அன்று காலை 08.15 மணிக்கு விருதம்பட்டு காளியம்மன் கோயில் அருகே எதிரிகள் இருவரையும் காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது அதில் முதல் எதிரி மேனுவல் அகஸ்டின் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சுபியான் மற்றும் துரை

ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து எதிரியின் ஒப்பம் பெற்று சாட்சிகளின் கையொப்பம் பெற்று அதன் அடிப்படையில் காலை 09.45 மணியளவில் அதே இடத்தில் எதிரிகளிடமிருந்து பதிவு எண் இல்லாத Engine No and Chasis No அழிக்கப்பட்ட பச்சை கருப்பு நிற Hero Honda இருச்சக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ. 11** ஆகும்.

பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தேன். பிறகு மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் என் விசாரணையை முடித்து மேற்கொண்டு விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தசரதன் என்பவர் எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்கு ஏற்றவாறு புகார் தயார் செய்து அவரிடம் கையொப்பம் மட்டும் பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. அதே போன்று நடேசன் மற்றும் தசரதன் ஆகியோர்களிடம் புகார் வாக்குமூலம் பெற்று கையொப்பம் செய்து கொடுத்த புகார் வாக்குமூலத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் அதை மறைத்து வேறு ஒரு புகார் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வரைபடம், பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் காவல் நிலையத்திலேயே வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னது போல் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றும் சொன்னது போல் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவும் இல்லை, அவர்கள் வாக்குமூலங்களும் கொடுக்கவில்லை என்றும் அவர்களிடமிருந்து எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

அ.த.சா.ஆ. 1 புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் புகார்தாரர் அவருடைய புகாரில் தேதி குறிப்பிடவில்லை. புகார் கூட அவர் கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் இடைவெளி விட்டு கையொப்பம் பெற்று அதை பூர்த்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அவர் கொடுத்த புகார் தான்.

முதல் தகவல் அறிக்கையில் column 3 ல் c ல் பொது நாட்குறிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பி வைக்கப்பட்டது என்றால் நான் மறுநாளே அனுப்பி வைத்துவிட்டேன்.

கைது குறிப்பாணையில் column 8ல் கைப்பற்றப்பட்ட சொத்து விவரங்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. நான் தயார் செய்த படிவம் 91 ல் கண்ணாடி மற்றும் செங்கல் ஆகியவைகளை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க தயார் செய்த படிவம் 91 வரிசை எண் 3718817 என்றும், இருச்சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டதற்காக தயார் செய்யப்பட்ட படிவம் 91 ன் வரிசை எண். 3718816 என்றும் அதனால் 29.02.2024 அன்று தயார் செய்த படிவம் 91 ன் வரிசை எண் முரண்பட்டுள்ளது என்றால் தவறுதலாக எழுதப்பட்டுள்ளது.

சம்பவத்தன்று சந்தேகத்தின் பேரில் 6-7 நபர்களை காவல் நிலையம் அழைத்து கொண்டு போய் வைத்திருந்தோம் என்றும் எதிரிகள் இருவரும் குடி போதையில் இருந்ததால் அவர்கள் மீது பொய் வழக்க போட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. டி.கே. புரம் செல்லும் ரோடு சுமார் 40 அடி அகலம் உள்ள ரோடா என்றால் 30 அடி அகலம் உள்ள ரோடாக இருக்கும். அந்த சாலையில் 2 பேருந்துகள் தாராளமாக சென்று வரலாம் என்றால் தாராளமாக சென்று வர முடியாது. சாலையின் இரு பக்கமும் வீடுகள் உள்ளது.

அந்த ரோடு குமரன் மருத்துவமனைக்கு எதிரில் உள்ளது என்றால் இல்லை. விருதம்பட்டு ரோட்டிலிருந்து சுமார் 100 மீட்டர் தள்ளி கழிஞ்சூர் சாலை உள்ளது என்றால் சரிதான். நான்

உண்மையில் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் சென்றிருந்தால் உண்மைத்தன்மை தெரிந்திருக்கும் என்றும் அதனால் தான் எந்தெந்த சாலை எங்கு போகிறது என்று என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல.

சாட்சிகள் யாரும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்கு ஏற்றவாறு வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் அ.சா.1 மற்றும் 2 இருவரும் பணியில் இருந்தார்கள் என்பதை காட்ட trip sheet எதுவும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் கைப்பற்றவில்லை ஆனால் trip sheet எங்களுடைய வழக்கு கோப்பில் உள்ளது. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இளங்கோ, ராஜேஷ் மற்றும் பாஸ்கர் ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்த்ததாக ஜோடனை செய்யப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல. நான் தவறான தகவலின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.28 17:01:27 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.10 (L.W.12)

| | |
|---|---|
| Name | Thiru.Tamilselvan |
| Father/Husband Name | Seppaiyan |
| Calling/Occupation | Inspector of Police |
| Age | 47 |
| Address | Thirupathur Town Police Station, Thirupathur District |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.07.2026.

(A1 produced through Video Conference and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகர காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் விருதம்பட்டு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்த போது நிலைய குற்ற எண்.78/2024 வழக்கில் புலன் விசாரணை முடித்து மேல் விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்தன் பேரில் நான் வழக்கை விசாரணைக்கு 01.03.2024 அன்று எடுத்து கொண்டு சேதம் அடைந்த வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன

ஆய்வாளர் அறிக்கை பெற்றேன். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் மாணிக்கம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். மேலும் கிளை மேலாளர் கணேசன் அவர்களை விசாரித்து சேதாரம் குறித்து அவரை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கொடுத்த damage certificate **அ.த.சா.ஆ. 12** ஆகும்.

காவல் உதவி ஆய்வாளர் ஏற்கனவே விசாரணை செய்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரணை செய்ததில் அவரிடம் சொன்னது போலவே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. முதல் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திரு. சிவசந்திரன் அவர்களை விசாரித்து விசாரணையை முடித்து பிரிவு மாற்று அறிக்கையுடன் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாற்று அறிக்கை **அ.த.சா.ஆ. 13** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ. 12 ஆவணம் யாருக்கு கொடுத்த ஆவணம் என்று அதில் குறிப்பு உள்ளதா என்றால் சான்றில் அவ்வாறு தெரிவிக்கவில்லை ஆனால் விசாரணையில் தெரிவித்துள்ளார். மோட்டார் வாகன ஆய்விற்கு 7 நாட்கள் காலதாமதமாக உட்படுத்தினேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தான இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று அது சம்மந்தப்பட்ட

ஆவணத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், காரணம் அவ்வாகனத்தை கைப்பற்றி ஆய்வு செய்தபோது வாகனத்தின் பதிவு எண், என்ஜின் மற்றும் chasis எண் ஆகியவைகள் அழிக்கப்பட்டிருந்ததால் வாகனத்தை பற்றிய விவரங்கள் சேகரிக்க முடியவில்லை.

மேற்கண்ட விவரம் குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு அவ்வாறு சொல்லவில்லை. வாகனத்தின் கண்ணாடி உடைத்து சேதப்படுத்திவிட்டார்கள் என்றும் அதனால் சேதப்படுத்தியவர்களிடமிருந்து நஷ்ட ஈடு வாங்கி கொடுங்கள் என்று போக்குவரத்து துறையை சேர்ந்த அதிகாரிகள் யாரும் என்னிடம் மனு கொடுக்கவில்லை.

எதன் அடிப்படையில் சேதார மதிப்பு முடிவு செய்தீர்கள் என்று விசாரணை செய்தேனா என்றால் அது சம்மந்தப்பட்ட வல்லுநர்களுக்கு தான் சேத மதிப்பு தெரியும் அதனால் சம்மந்தப்பட்ட நபரிடம் சேத மதிப்பு சான்று பெற்றேன். வல்லுநர்கள் யாரையாவது விசாரணை செய்தேனா என்றால் தனிப்பட்ட முறையில் வல்லுநர்கள் யாரையும் விசாரிக்கவில்லை, மேலாளரே அதில் அனுபவம் உள்ளவர் என்பதால் அவரை விசாரித்து சான்று பெற்றேன்.

அ.த.சா.ஆ. 12 ஆவணத்தை அனுமானத்தின் அடிப்படையில் வாங்கினேனா என்றால் இல்லை ஆதாரத்தின் அடிப்படையில்

வாங்கினேன். வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்ட ஆவணம் அ.த.சா.ஆ. 12 என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் விசாரித்தேன் என்று சொல்வதும் அதே போன்று உதவி ஆய்வாளரிடம் சொன்னது போல் என்னிடமும் சொன்னதால் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றும் நான் சாட்சிகள் யாரைவயும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் புகார்தாரர் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், என்னுடைய ஆலோசனையின் பேரில் புகார் தயாரிக்கப்பட்டு எதிரிகளை இந்த வழக்கில் தினித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்த கூட்டத்தில் யாரோ ஒருவர் கண்ணாடியை உடைத்துவிட்டார் என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சம்மந்தமில்லாத எதிரிகள் மீது வழக்கு போட்டுவிட்டேன் என்றால் தவறு புகார் கொடுக்கும்போதே எதிரியின் பெயர் குறிப்பிட்டு கொடுக்கப்பட்டது.

சான்று ஆவணங்கள் சான்று பொருட்கள் வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையான குற்றவாளிகளை இந்த வழக்கிலிருந்து தப்பிக்க விட்டுவிட்டு எதிரிகள் குடிபோதையில் இருந்ததால் அவர்கள் மீது பொய் வழக்கு

போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறான தகவலின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.28 17:01:52 +0530